මගේ අංකය
எனது இல.
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No .

දිනය
திகதி
Date.

# ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
# Human Rights Commission of Sri Lanka

தவிசாளர்
இலங்கை தேர்தல் ஆணைக்குழு
ராஜகிரிய

கௌரவ தவிசாளர் அவர்கட்கு,

**<u>பொதுத்தேர்தல் 2020 - மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரேரனை மற்றும் பரிந்துரைகள்</u>**

முதன்மையாக இந்த சவாலுக்குரிய காலப்பகுதியில் சாதாரண மற்றும் சுதந்திரமான தேர்தலை நடாத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் மூலம் மேற்கொள்ளும் ஒத்துழைப்பு தொடர்பில் எங்களின் நன்றியை தெரிவிக்கின்றோம்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கடந்த 2019 சனாதிபதித் தேர்தல் காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுபவங்கள் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய கொவிட் - 19 நிலைமையில் தனிமைப்படுத்தல் மற்றும் நோய் தடுப்பு கட்டளைச் சட்டத்தின் 2 ஆவது மற்றும் 3 ஆவது பிரிவுகளின் கீழ் சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சரால் வெளியிடப்பட்ட கட்டளைகளின் அடிப்படையில் தங்களின் ஆணைக்குழுவிற்கு இப்பொதுத்தேர்தலை நடாத்தும் போது மனித உரிமை தரங்களை மேலும் சாதகமாக்கிக் கொள்வதற்கு கீழ் குறிப்பிடப்படும் பிரேரனைகளை அல்லது பரிந்துரைகளை முன்வைக்கின்றோம்.

01. தனிமைப்படுத்தல் மற்றும் நோய் தடுப்பு கட்டளைச் சட்டத்தின் 2 ஆவது மற்றும் 3 ஆவது பிரிவுகளின் கீழ் சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சரால் வெளியிடப்பட்ட கட்டளைகளில் தேர்தல் தினமன்று மக்களின் சுகாதாரப் பாதுகாப்புக்காக வாக்கெடுப்பு நிலையங்களில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. தங்களின் வாக்கை அளித்தல் மிக முக்கியமான மனித உரிமையாகுமென கௌரவ உயர்நீதிமன்றத்தினால் குறிப்பிடப்பட்டுள்ளது. இம்முறை சுகாதார நிலைமையை காரணம்காட்டி எவரேனும் வாக்காளரிற்கு அவர்களின் வாக்குரிமையை பாவிப்பதற்கு இடையூறுகள் ஏற்படலாம் என்பதால் இலங்கை தேர்தல் ஆணைக்குழுவினால் அது சம்பந்தமாக மிகத் தெளிவான சுகாதார வழிகாட்டல் நெறிமுறைகளை தமது பணியாட் குழுவுக்கும், வாக்காளர்களுக்கும் தேர்தல் தினத்திற்கு முன்னர் எழுத்து மூலமாகப் பெற்றுக்கொடுத்தல் மிகவும் முக்கியமாகும்.

02. தேர்தலொன்றின்போது வாக்களிப்பதற்கான உரிமை இழக்கப்படுவதற்கு காரணமான அந்தத் தேர்தலின்போது வாக்களிப்பதற்கான உரிமை கிடைக்கப்பெறும் ஆண்டின் தேருநர் இடாப்பிற்கு யாராவது வாக்காளரின் பெயர் நிர்வாக குறைபாட்டின் காரணமாக உள்ளீர்க்கப்படாவிட்டால் அது தொடர்பில் தங்களின் ஆணைக்குழுவினால் அவசர தீர்வு பெற்றுக்கொடுப்பது மிகவும் முக்கியமானதாகும். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அவ்வாரான காரணத்திற்காக வாக்குரிமையை இழந்த வாக்காளர்கள் தொடர்பாக அறியக்கிடைத்துள்ளது. அது மோசமான சாதாரணமான தேர்தலுக்கு தடையான நிலைமையாகும்.


ප්‍රධාන කාර්යාලය / தலைமைக் காரியாலயம் / Head Office: 14, ආර්. ඒ. ද. මෙල් මාවත, කොළඹ - 04. / 14, ஆர்.ஏ.த.மெல் மாவத்தை, கொழும்பு-04. / 14, R.A.De Mel Mawatha, Colombo - 04.
දුරකථන / தொலைபேசி / Telephone: 94-11- 2505580/81/82
සභාපති / தவிசாளர் / Chairperson: 011-2505451
ලේකම් / செயலாளர் / Secretary: 011-2505521
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 2505541/74
ක්ෂණික / துரித அழைப்பு / Hotline: 011-2505575 1996
විද්‍යුත් තැපැල / மின்னஞ்சல் / E-mail: sechrcsl@gmail.com
වෙබ් / இணையம் / Web: www.hrcsl.lk

03. அனைத்து விதத்திலான விசேட தேவையுடையோா் வாக்களிப்பதற்காக வருகை தருவதற்கு தடையாக இருக்கும் பிரவேசத்திற்கான சிக்கல்கள் மற்றும் வாக்களிக்கும் போது ஏற்றுக்கொள்ளக்கூடிய நடைமுறைகளை உறுதிப்படுத்தல் வேண்டும். ''எவரேனும் விடுபடாத தேர்தலை உறுதிப்படுத்தல்'' மேலான உபகாரமாகவிருக்கும்.

04. வாக்களித்ததன் பின்னர் வாக்காளர்கள் யாருக்கு வாக்களித்தனர் என்ற தனிப்பட்ட விடயத்தை வெளிக்கொணர்வதற்கான வாய்ப்புக்களை நீக்குதல்.

05. ஒரு இனத்திற்கு அல்லது மதத்தைச் சேர்ந்த பிரஜைகளுக்குச் சொந்தமான இடங்களை வாக்கெடுப்பு நிலையங்களாகப் பயன்படுத்தாதிருத்தல்.

06. பூகோள ரீதியாக தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் (தீவு அல்லது பாதை வசதிகள் இல்லாத மலைத்தொடர்கள் அல்லது பெரிய காடுகள் தடையாக இருக்கும் பிரதேசங்கள்) வாக்காளர்களுக்கு தமது வாக்கை அளிப்பதற்கு முடியுமான வகையில் வசதியான மற்றும் நடைமுறைச் சாத்தியமான செயல்முறையொன்றை தயாரித்தல்.

07. பிக்குணிகளுக்கு தேசிய அடையாள அட்டை விநியோகிக்கும் முறையில் சிக்கலொன்று நிலவுவதனால் அதற்கான நடைமுறைச் சாத்தியமான மாற்று வழிமுறையாக தேர்தலுக்காகத் தயாரிக்கப்பட்ட விசேட அடையாள அட்டையொன்றை அறிமுகஞ் செய்தல். இங்கு ''மதகுரு'' என அடையாள அட்டையில் பொதுவாகக் குறிப்பிடுதல் ஊடாக பிக்குணிமாருக்கும் தமது வாக்கை அளிப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க முடியும்.

08. சமய பெரஹராக்கள், சமய வைபவங்கள் ஆகியவை பாரம்பரியமாக நடாத்தப்படாத காலப் பகுதிகளில் தேர்தலை இலக்காகக்கொண்டு தேர்தல் ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்காக சமய பெரஹராக்கள் / சமய வைபவங்களை ஏற்பாடு செய்வதனைத் தவிர்த்தல்.

09. பெரஹராக்கள் / வாகன ஊர்வலங்கள் / ஊர்வலங்கள் சம்பந்தமாக தேர்தல் சட்டங்களை தேர்தலுக்குப் பின்னர் கண்டிப்பான முறையில் நடைமுறைப்படுத்தல்.

10. தேர்தல் காலத்தில் மேலதிகப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் நோக்கம் வாக்காளர்களின் வருகையைத் தடுப்பதற்கன்றி சுதந்திரமானதும், நீதியானதும் மற்றும் அழுத்தங்களின்றிய நிலைமையின் கீழ் தேர்தலை நடாத்துவதற்காகும் என்ற உணர்வை ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளல்.

11. தேர்தலின் பின்னர் தோல்வியுற்ற கட்சியின் ஆதரவாளர்களுக்கு அரச நிறுவனங்களில் துன்புறுத்தல் மேற்கொள்ளப்படுவதனை தடுப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளல்.

12. தேர்தலின் பின்னர் தோல்வியுற்ற கட்சியின் ஆதரவாளர்களுக்கு கிராம மட்டங்களில் துன்புறுத்தல் மேற்கொள்ளப்படுவதனை தடுப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளல்.

13. தேர்தல் காலத்தில் அரச மற்றும் தனியார் ஊடகங்களின் செயற்பாட்டினிடையே வாக்காளர்கள் தமது வாக்கை சுதந்திரமாகவும், நீதியாகவும் மற்றும் அழுத்தங்களின்றி அளிப்பதற்கு துணைபுரியும் வகையில் வெளியிடப்பட்டுள்ள ஊடக வழிகாட்டல் நெறிமுறைகளின் நடைமுறை பயன்பாடு சம்பந்தமான ஒழுங்குபடுத்தலை மேற்கொள்ளல்.

தவிசாளர்,
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

2020 ஜூலை மாதம் 24 ஆம் திகதி